# தேசத்தின் நாளைகளும் சமூகத்தின் கடமைகளும்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

# தேசத்தின் நாளைகளும் சமூகத்தின் கடமைகளும்

**வெளியீடு:**

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு - 09
தொலைபேசி: 0112687091
பெக்ஸ்: 0112686030
**E-Mail: secretariatslji@gmail.com**

| | |
|---|---|
| Title: | தேசத்தின் நாளைகளும் சமூகத்தின் கடமைகளும் (Tomorrows of the nation and the re sponsibilities of the society) |
| Author : | Usthaz Rasheed Hajjul Akbar |
| Published by : | Sri Lanka Jama`athe Islami<br>No. 77, Dematagoda Road,<br>Colombo -09<br>011 268 7091 |
| First Edition : | 2019 December |
| Price : | 100/= |
| No of Copies : | 1000 |
| Printed by : | IPC<br>No. 3, Devaas Lane,<br>Grand Pass,<br>Colombo -14. |
| ISBN : | 978-955-0787-09-8 |

## முன்னுரை

இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம் பெயர் தாங்கிகள் சிலர் நடத்திய உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்கள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் பற்றிய புரிதல்களைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக்கும் ஒரு சூழலில் இன்று நாம் வாழ்கின்றோம். இந்த சூழல் எத்தகைய பின் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது அனைவரும் அறிந்த விடயமே.

இந்நிலையில் முஸ்லிம் சமூகம் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் குறித்துப் பலரும் பேசிவருகிறார்கள்; எழுதிவருகிறார்கள் என்பதை இங்கு நன்றியுடன் நினைவுகூறிக்கொண்டு, அத்தகைய விடயங்களைத் தொகுத்திருக்கின்ற ஒரு முயற்சியையே நாம் செய்திருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

அத்துடன் இந்த ஏடு பேசுகின்ற விடயங்கள் தொடர்பில் ஒரு கருத்தையும் இங்கு பிரஸ்தாபிப்பது பொருத்தம் எனக் கருதுகின்றோம்.

அதாவது, இங்கு ஆலோசனைகளாக முன்வைக்கப்பட்டிருப்பவை அனைத்தும் முஸ்லிம் சமூகத்தை விழித்துப் பேசப்பட்டிருந்தாலும் குறித்த ஆலோசனைகளால் நன்மையடையப் போவது முஸ்லிம்கள் மட்டுமல்ல; இந்த நாட்டு மக்கள் அனைவருமே இவற்றால் நன்மையடைய வாய்ப்புள்ளது. அவ்வாறு அனைவரும் நன்மையடையும் சூழல் ஒன்று உருவாக்கப்படும் போதே சமூகங்களுக்கிடையிலான உறவுகள் ஆரோக்கியம் பெற்று புரிதல்களும் மேம்படுத்தப்பட முடியும்.

இங்கு முன்வைக்கப்படுகின்ற ஆலோசனைகள் ஏட்டிலுள்ள வெறும் ஆலோசனைகளாக மட்டும் இருந்துவிடாமல் குறைந்தளவிலாவது செயல்வடிவம் கொடுக்கப்படுமாக இருந்தால்தான் மக்கள் நன்மையடைவார்கள்... புரிந்துணர்வுகளும் அதிகரிக்கும் என்பது வாசகர்களுக்குத் தெரியாததல்ல. இருப்பினும், செயல்வடிவம் பெறுவதற்கு முன்பதாக இவ்வாலோசனைகள் கலந்துரையாடப்பட முடியுமாக இருந்தால் அனுபவசாலிகளின் உள்ளீடுகளையும் பெற்று குறித்த ஆலோசனைகளை மேலும் வலுவூட்டலாம்.

அவ்வாறு கலந்துரையாடல்களை நடத்துபவர்கள் அனுபவசாலிகள் தருகின்ற பெறுமதியான பின்னூட்டல்களைப் பெற்றுக் கொண்டால் அவற்றை எங்களோடும் பகிர்ந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

**பொதுச் செயலாளர்**
**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை,**
**கொழும்பு - 9**

**தொலைபேசி: 0112687091**
**பெக்ஸ்: 0112686030**
**E-Mail: secretariatslji@gmail.com**

**01.12.2019**

01

# தீவிரவாதத்தைக் களைதல்

தற்போதைய நாட்டுச் சூழலில் நாம் கவனம் செலுத்தவேண்டிய முதல் அம்சம், தீவிரவாதத்திற்கு சிறிய அளவிலோ பெரியளவிலோ, நேரடியாகவே மறைமுகமாகவோ இட்டுச் செல்லும் அறிகுறிகள் எங்கேனும் தென்பட்டால் அவற்றை இல்லாமல் செய்வதில் விழிப்பா கவும் முனைப்பாகவும் செயற்படுவதாகும்.

தீவிரவாதம் என்பது முரண்படுதல் என்ற இடத்தில் (வேறுபடுதல் அல்ல) ஆரம்பித்து ஒதுங்கிச் செல்லல், இரகசியமாக இயங்குதல், இரகசியக் குழுவினர்களிடையே அளவு கடந்த அன்பும் மரியாதையும் கொண்டிருத்தல், குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் உறவினர்களுடனான பற்று குறைதல் அல்லது அவர்களையும் தீவிரவாதத்தின் பக்கம் கொண்டு செல்வதற்காக முன்பிருந்ததைவிட அவர்களுடனான உறவை அந்நியோன்ய மாக்குதல், தீவிரவாதக் குழு உறுப்பினர்கள் தவிர்ந்த எவரையும் கருத்தி லெடுக்காதிருத்தல்; அத்தகையவர்கள் சான்றோராக... அறிஞர்களாக இருப்பினும் சரியே. பொதுவாக அனைவருடனும் குறிப்பாக ஒரு சாராருடன் தீவிர பகையைக் கொண்டிருத்தல். அதாவது, அவர்கள் மீதான வெறுப்பு மற்றும் விமர்சனம் என்பவற்றின் மீதே தங்களது கொள்கை கோட்பாடுகளையும் உறவுகளையும் கட்டியெழுப்புதல்,

இரகசியங்களைப் பாதுகாப்பதற்காக ஏமாற்றுதல், பொய் கூறுதல், தந்திரங்களைக் கையாளுதல், பழிவாங்குதல் போன்ற இன்னோரன்ன அறிகுறிகளை அல்லது பண்புகளைக் கொண்டிருக்கும்.

பொதுவாக முரண்பட்டு விமர்சித்து ஒதுங்கிச் செல்லும் சுபாவம் கொண்டவர்கள்தான் தீவிரவாதத்தால் இலகுவாகக் கவரப்படுவதுண்டு. தீவிரவாதத்தால் கவரப்பட்ட பின் சிரிப்பு, மலர்ந்த முகம், கலகலப்பு, உல்லாசம் என்பன அடியோடு இவர்களைவிட்டு விடை பெற்று விடுகின்றன.

மேற்கூறப்பட்ட போக்குகள் இளைஞர்களிடையேதான் உருவாகுகின்றன. எனவே, குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், சமூக உறுப்பினர்கள் என அனைவரும் இளைஞர்கள் விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும். தீவிரவாதத்தின் அறிகுறிகள் இளைஞர்களிடையே தென்பட்டால் பெரியவர்கள் விழிப்படைந்து விட வேண்டும். குறித்த இளைஞர்களின் நண்பர்களையும் நடமாட்டங்களையும் கூர்ந்து அவதானிக்க வேண்டும். “என் பிள்ளை நல்லவன்” என்று இருந்துவிடக் கூடாது.

மார்க்கத்துக்கும் சமூகத்திற்கும் தேசத்திற்கும் இனிவரும் காலங்களில் முஸ்லிம் சமூகம் ஆற்ற வேண்டிய பங்களிப்புகளில் இதனை முதன்மையானதாகக் குறிப்பிடலாம். தீவிரவாதத்தை அதன் அறிகுறிகள் தென்படும் போதே வளரவிடாது தடுப்பதுதான் உண்மையில் சிறந்த பாதுகாப்பாகும்.

02

## வேறுபடுதலை அங்கீகரித்தல்

*தீவிரவாதம் என்பது "முரண்படுதல்" (خلاف) என்ற புள்ளியிலிருந்து தான் துவங்குகின்றது என்று பார்த்தோம். "வேறுபடுதல்" (اختلاف) அவ்வாறானதல்ல. இரண்டையும் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை.*

*'வேறுபடுதல்' இயற்கையானது... அருள்நிறைந்தது... சுதந்திரத்தின் பாற்பட்டது... அறிவு, ஆராய்ச்சி என்பவற்றின் விருத்திக்கு உதவக் கூடியது. 'முரண்பாடு' அவ்வாறனதல்ல; அது பிறரது சுதந்திரத்தில் அநாவசியமாகத் தலையிடக் கூடியது. பிளவுகளைக் கூர்மையாக்கி வெறுப்பையும் குரோதத்தையும் வளர்க்கக் கூடியது... மொத்தத்தில் சாபக்கேடானது.*

*எனவே, 'வேறுபடுதலை' அங்கீகரித்து 'முரண்படுதலை' விட்டு நாம் தூரமாக வேண்டும். மாற்றுக் கருத்துள்ளவர்களை அறிவுபூர்வமாகவும் அழகிய மொழியினூடாகவும் பண்பாடாகவும் அணுகும்போது 'வேறு படுதலை' நாம் அங்கீகரிக்கின்றோம் என்பது பொருள். அதாவது, சகிப்புத் தன்மையோடு செயலாற்றுகின்றோம் என்று அர்த்தம். கற்பனைகள், கட்டுக் கதைகள், பொய்கள், கடுமையான வார்த்தைகள், ஆக்கக் கேடான விமர்சனங்கள், வெறுப்புப் பேச்சுக்கள், குரோத மனப்பாங்குகள்*

என்பவற்றினூடாக அணுகும்போது ‘வேறுபடுதல்’ என்ற நிலையிலிருந்து விலகி ‘முரண்படுதல்’ என்ற ஆபத்துக்குள் நுழைகின்றோம். அப்போது சகிப்புத் தன்மை முற்றிலும் எம்மை விட்டு விடைபெற்று விடுகின்றது.

இதுதான் தீவிரவாதத்தின் ஆரம்பப் புள்ளி. இந்த இடத்திலிருந்து துவங்கும் தீவிரவாதம், நாம் ஏற்கனவே குறிப்பிட்ட தீவிரவாத அறிகுறிகள் அனைத்தையும் உள்வாங்கிய நிலையில் நாசம் விளைவிக்குமளவு வளரலாம். இடையில் ஓரிடத்தில் சில அறிகுறிகளோடு நின்றுவிடவும் கூடும். எவ்வாறாயினும், அது வளருகின்ற அளவுக்கு நாசங்களும் வளரவே செய்யும்.

முஸ்லிம்கள் நாட்டிலிருக்கும் மத வேறுபாடுகளை அங்கீகரித்து சகிப்புத் தன்மையோடு செயல்பட்டிருக்கின்றார்கள் என்று உறுதியாகக் கூற முடியும்; சிலை சேதப்படுத்தியவர்கள் மற்றும் 4/21 பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியவர்களைத் தவிர. அவர்கள்தான் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் முதன் முறையாக பன்மைத்துவ வேறுபாடுகளை முரண்பாடுகளாக மாற்றிக் கொண்டவர்கள். அதனால் அவர்கள் எங்கனம் ஒரு சாபக்கேடாக மாறினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

எனினும், முஸ்லிம்கள் தமக்கிடையே இருக்கின்ற வேறுபாடுகளை அங்கீகரித்து சகிப்புத் தன்மையோடு நடந்தார்களா என்று பார்த்தால் விடை பூச்சியத்திற்கு நெருக்கமாகவே இருக்கும். முஸ்லிம்கள் தங்களுக்கு மத்தியிலிருக்கின்ற சிறிய வேறுபாடுகளையும் பாரிய முரண்பாடுகளாக மாற்றி சர்ச்சைகளுக்குள்ளாகியிருப்பதை மறுக்க முடியாது.

ஐரோப்பா இரண்டு உலக மகா யுத்தங்களை எதிர்கொண்டிருக்கின்றது. தனக்குள் இருந்த வேறுபாடுகளை முரண்பாடுகளாக மாற்றி சகிப்புத் தன்மையை இழந்தமைதான் அதற்கான காரணம். எனினும், இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு இன்று வரை எந்த யுத்தமும் ஐரோப்பாவில் நடைபெறவில்லை. காரணம், தமக்கிடையிலான

வேறுபாடுகளை அங்கீகரித்து சகிப்புத் தன்மையோடு செயல்படும் இடத்திற்கு அவர்கள் வந்தமையே.

எனினும், மத்திய கிழக்கில் முஸ்லிம்கள் தம் சகோதர முஸ்லிம் களோடு போராடுகிறார்கள். தமக்கு மத்தியில் இருக்கின்ற வேறுபாடு களை அங்கீகரித்து சகிப்புத்தன்மையோடு செயல்படத் தவறியதனால் வந்த விபரீதம் அது. அவ்வாறாயின் எது அருள்; எது சாபக்கேடு?

இலங்கை முஸ்லிம்களாகிய நாம் நாட்டு மக்கள் மத்தியில் இருக்கின்ற வேறுபாடுகளாயினும் சரி... முஸ்லிம்கள் மத்தியில் இருக்கின்ற வேறுபாடுகளாயினும் சரி... அவற்றை முரண்பாடுகளாக மாற்றிக் கொள்ளாமல் அனைவரோடும் சகிப்புத் தன்மையைப் பேணி இணக்கமாக நடந்து கொள்ளும் நிலைக்கு வர வேண்டும்.

இந்த விடயத்தில் இலங்கை முஸ்லிம்களின் நிலை முன்பிருந்ததை விட மேம்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், முன்னேற வேண்டிய தூரம் இன்னும் நீண்டே இருக்கின்றது.

03

## பேச்சும் நடத்தையும் இலங்கைக்கானதாக இருத்தல்

முஸ்லிம்கள் தம் சமய, சமூக, உலகியல் பற்றிய உரையாடல்களின் போது மனித சமூகத்தின் சுபிட்சம், அமைதி, பாதுகாப்பு, எதிர்காலம், மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வு, நாட்டின் அபிவிருத்தி போன்றவற்றை பிரதிபலிக்கும் வகையில் தமது பேச்சுகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஆலிம்கள் பேசினாலும்... அரசியல்வாதிகள், சமூகத் தலைவர்கள் பேசினாலும் அவர்களது பேச்சுக்கள் முஸ்லிம்களுக்காக முஸ்லிம் பாஷையில் பேசுவது போன்று அமைந்துவிடக் கூடாது. காரணம், முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்காக, முஸ்லிம் பாஷையில் பேசும்போது அதனை இந்நாட்டு மக்கள் விளங்கிக் கொள்வதில்லை. இதன் பொருள், அனைவரும் சிங்களத்தில் பேச வேண்டும் என்பதல்ல; பேசுகின்ற விடயதானம் மக்கள் நலனை சம்பந்தப்படுத்தியதாக இருக்க வேண்டும் என்பதே!

முஸ்லிம் சமூகத்திற்குத் தற்போது ஏற்பட்டிருக்கின்ற அவலங்கள் பற்றிப் பேசும்போதுகூட இவற்றால் நாடு எதிர்காலத்தில் சந்திக்கப் போகும் நட்டங்கள் பற்றியும் நாட்டின் வளமான எதிர்காலம் எவற்றில் தங்கியிருக்கின்றது என்பது பற்றியுமே நாம் பேச வேண்டும்.

முழு மனித சமூகத்திற்காகவும் தோற்றுவிக்கப்பட்டதொரு சமூகம் தனது சொந்த வாழ்வையும் சாவையும் பற்றியே பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. மாறாக, மனித சமூகத்தின் வாழ்வு, அதில் உள்ள பிரச்சினைகள், அவற்றிற்குரிய தீர்வுகள் என்ன என்பதைத்தான் பேச வேண்டும். எங்களது குத்பாக்கள், பயான்கள் மற்றும் உரையாடல்கள் இந்தக் கோணத்தில் அமையுமாயின், முஸ்லிம்கள் அனைவரும் நாட்டு நலனுக்காக உழைப் பவர்கள் என்பதனை பலரும் புரிந்து கொள்வார்கள்; அதனைப் பேசவும் செய்வார்கள். அப்போது அவர்களுக்கும் ஏனைய மக்களுக்குமிடை யிலான நல்லுறவு மலரும்... பரஸ்பர பங்களிப்பு அதிகமாவதற்கும் வாய்ப்பு ஏற்படும். சமூகங்களுக்கிடையிலான நெருக்கமும் அதிகரிக்கும்.

அது மட்டுமல்ல, பேச்சுடன் எமது நடத்தைகளும் கூட இலங்கை மயமானதாக இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். நாம் சஊதி அரேபிய மக்களைப் போன்று அல்லது இந்தியா, பாகிஸ்தான், எகிப்து மக்களைப் போன்று இங்கு வாழ்ந்து இந்த நாட்டு மக்களுக்கும் இந்த நாட்டு முஸ்லிம்களுக்குமிடையில் இடைவெளிகளைக் கூட்டிக் கொள்ளக் கூடாது.

சமூகங்களுக்கிடையில் இடைவெளிகளை அதிகரிக்கச் செய்யும் ஒரு காரணியாக அது இன்று பெரிதுபடுத்திப் பேசப்படுகின்ற நிலையில், நாம் அது குறித்து அலட்சியமாக இருப்பது நன்மைகளை விட தீமைகளை வளர்ப்பதற்கு உதவுவதாகவே இருக்கும்.

அடையாள வேறுபாடுகள் உண்மையில் மேலோட்டமானவை தான். எனினும், அந்த வேறுபாடுகள் பூதாகரமாக்கப்பட்டு... சிலபோது ஒரு கலாசார ஆக்கிரமிப்பு என்று சித்திரிக்கப்பட்டு சமூகங்களுக்கிடையே இடைவெளிகளைக் கூட்டும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. அந்த முயற்சிக்கு நாங்கள் ஏன் சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் ஏற்படுத் திக் கொடுக்க வேண்டும்?

ஆக, பேச்சிலும் நடத்தையிலும் இத்தகையதொரு மாற்றத்தை நாம் ஏற்படுத்திக் கொள்வது எமக்கும் எமது எதிர்கால சந்ததிகளுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும்.

04

## வெளிப்படையாக இருத்தல்

பேச்சும் நடத்தையும் இலங்கைக்கானதாக இருத்தல் என்ற தலைப்பில் நாம் மேலே பார்த்த விடயத்தை நடைமுறைப்படுத்தினால் மற்றுமொரு நன்மையும் கிடைக்கலாம். அதுதான் நாம் எப்போதும் வெளிப்படையானவர்களாக இருப்போம் என்பதாகும்.

எமது பேச்சு மற்றும் நடத்தைகள் எமது நாட்டின் சுபிட்சத்தையும் நலனையும் அதன் சிறந்த எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டவையாக இருந்தால்... அதே போன்று மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றைத் தீர்க்கும் முனைப்புக் கொண்டவையாக இருந்தால்... நாம் அனைவருடனும் இருக்கின்றோம்... வெளிப்படையாக இருக்கிறோம் என்பதை விளங்கிக் கொள்வதில் எவருக்கும் சிரமமிருக்க மாட்டாது.

அதேபோன்று, சகோதர சமூகங்களுடனான தொடர்பாடல்களில் கரிசனை கொண்டவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். சினேகபூர்வமான, உல்லாசமான சந்திப்புக்கள் ஊடாக... சிங்கள மொழியிலான ஊடகங்கள் வாயிலாக... பள்ளிவாசல்கள் பாடசாலைகள் மூலமாக... வியாபார சங்கங்கள், தொழிற் சங்கங்கள் என்பவற்றினூடாகவும் இன்னும்

பல்வேறு சாதனங்களூடாகவும் தொடர்பாடல்களை விருத்தி செய்ய வேண்டும். அத்தகைய தொடர்பாடல்களின்போது மக்கள் அனைவரும் எதிர்கொள்கின்ற பொதுவான பிரச்சினைகள் குறித்தே அதிகம் கலந் துரையாட வேண்டும். எமது பிரச்சினைகளை முன்வைத்துப் பேசுகின்ற வேளைகளில் கூட இலங்கை மக்களின் பிரச்சினைகளது பகுதியாக அவற்றை இனங்காட்டுவதே சிறந்தது.

அது மட்டுமல்ல, எமது சுற்றுலாக்கள் சகோதர சமூகங்களின் பாரம் பரியங்களை அறிந்து கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டால்... பாடசாலைகளுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டால் அதுவும் எங்களை வெளிப்படையானவர்களாக மாற்றும்.

இவ்வாறு இன்னும் பல்வேறுபட்ட வழிமுறைகளைக் கையாண்டு வெளிப்படையானதொரு சமூகமாக (ஒதுங்கி வாழும் பிரமையை ஏற்படுத்தும் சமூகமாகவன்றி) நாம் செயற்பட வேண்டும். மொழி வேறுபாடு இதற்கொரு தடையாக அமைந்துவிடாமல் இருப்பதற்கு தேசிய மொழிகளைக் கற்கின்ற, கற்பிக்கின்றதொரு சூழலையும் நாம் உருவாக்க வேண்டும்.

05

## சட்டத்தை அறிந்து செயல்படுதல்

*மார்க்கம் பற்றிய அறிவை எமது சமூகத்தில் பரவலாக்குவதற்கு நாம் முயற்சிப்பது போல நாட்டின் சட்டங்கள் பற்றிய அறிவையும் நாம் எம்மவர்களிடையே பரவலாக்க வேண்டும். சட்டம், ஒழுங்கு என்பவற்றைப் பேணாமல் இருப்பது புரிந்துணர்வு மலர்வதற்குத் தடையாக அமையும் காரணிகளுள் ஒன்றாகும்.*

*அது மட்டுமல்ல, சட்டம், ஒழுங்கு என்பவற்றை மதித்து நடப்பது வேண்டாத தொல்லைகளிலிருந்து பாதுகாப்பைத் தருகிறது; குற்ற உணர்வுடன் செயல்படும் மன நிலையையும் போக்கிவிடுகின்றது. அதனால் உள்ளமும் அமைதியடைகிறது; உலகிற்கும் நெருக்கடிகள் குறைந்து விடுகின்றன.*

*வீடு, வியாபாரம், தோட்டம் துரவுகள் போன்றன பற்றிய விபரங்கள், பண நடவடிக்கைகளுக்கான ஆவணங்கள், வருமானம், வருமான வரி என்பவற்றிற்கான ஆவணங்கள், கணக்கறிக்கைகள்... என எந்தவொன்றை எடுத்தாலும் அனைத்தும் சட்டத்துக்கமைய ஒழுங்குபடுத்தப்பட்டிருக் கின்றனவா என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.*

எந்தவொரு சிறிய பெரிய விடயமாயினும் சட்டத்தை அறிந்து செய்யும்போது அதற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைப்பது உறுதி. சட்டம் ஒழுங்கைப் புறக்கணித்து செயல்படும்போது வீணான அசௌ கரியங்களுக்கே முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்றது. சிலபோது கௌரவத்தையும் இழக்க வேண்டி வருகின்றது.

நாட்டை அறிதல் என்பது நாட்டின் சட்டங்களை அறிதல் என்று கூறுவதில் தவறில்லை எனலாம். அந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றதொரு விடயம்தான் சட்டம் மற்றும் ஒழுங்குகளை அறிந்து, மதித்து நடத்தலாகும்.

06

## தரத்தைப் பேணி சிறப்பாகச் செய்தல்

எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற ரீதியில் வேலகளைச் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிறியதோ பெரியதோ நாம் செய்பவற்றை தரமானதாகச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். ஒரு தேனீர் கடையைக் கூட நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டதாக, சுத்தமாக, நேர்த்தியாக நடத்துவதற்கு நாம் பயில வேண்டும். பாலர் பாடசாலைகள், சர்வதேசப் பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள், அறபு மத்ரஸாக்கள், மஸ்ஜித்கள், வியாபார நிலையங்கள் போன்ற எந்தவொரு திட்டத்தையும் நவீன ஒழுங்குகளைப் பேணியே நாம் முன்னெடுக்க வேண்டும் குறித்த நிறுவனம் தொடர்பில் கேட்கப்படும் எந்தவொரு கேள்வியாக இருந்தாலும் அல்லது எழுப்பப்படும் எந்தவொரு சந்தேகமாக இருந்தாலும் அதற்கு உடனடியாகப் பதில் கூறும் வகையில் அனைத்தும் ஒழுங்கு முறைகளுக்குள் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும்.

எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் அல்லது செயல்திட்டமாக இருந்தாலும் அதன் அடைவுகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டு அடையாளப் படுத்தப்படுவது சிறப்புக்குரியது.

1. முன்னெடுக்கப்படும் திட்டத்தால் திட்ட முகாமைத்துவக் குழுவுக்கு அல்லது அக்குழு சார்ந்திருக்கும் நிறுவனத்துக்கு கிடைக்கும் இலாபம்.

2. குறித்த திட்டத்தால் அல்லது நிறுவனத்தால் சமூகத்திற்குக் கிடைக்கும் நன்மைகள்

3. குறித்த திட்டத்தால் அல்லது நிறுவனத்தால் நாட்டிற்குக் கிடைக்கும் நன்மைகள்

இவ்வாறான மூன்று பங்களிப்புகளும் ஏதாவதொரு விகிதாசாரத்தில் இருப்பதை உறுதிப்படுத்துவது, தேசம் தொடர்பிலான எமது மனநிலையில் தற்போதிருப்பதை விடச் சிறந்த முன்னேற்றங்களைக் கொண்டுவர உதவும்.

07

## முன்னோக்கிச் செல்லுதல்

நபி (ஸல்) அவர்கள் இறுதி நாள் வரை உலகில் இடம்பெறப் போகும் சாதகமான மற்றும் பாதகமான மாற்றங்கள் பற்றி எதிர்வுகூறிச் சென்றிருக்கின்றார்கள் என்பது நாமறிந்ததே. அவ்வாறு அண்ணலார் கூறிச் சென்றதில் பெற முடியுமான படிப்பினைகளுள் ஒன்றுதான் வருகின்ற காலத்தை எதிர்கொண்டு முன்னேறுங்கள்; கடந்துசென்ற காலத்தையும் அதிலிருந்த நிலைகளையும் நினைத்து இழந்து போன வற்றுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள் என்பதாகும்.

முன்னோக்கி வருகின்ற பாதகமான சூழ்நிலைகளை நினைத்துத் தளர்ந்து விடாதீர்கள்; உறுதியோடு பயணத்தைத் தொடருங்கள். வாழ்க்கைப் பயணம் என்பது சமதரையில் செல்வதல்ல; மேடுகளையும் பள்ளங்களையும் கடந்த பயணமே அது. அதனால் பின்னோக்கிச் செல்லும் யோசனையைக் கைவிட்டு முன்னோக்கியே செல்லுங்கள். புதிய சூழல்கள் எதுவாயினும் அதற்குரியவர்களாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் போன்ற உண்மைகளை நபிகளாரின் எதிர்வுகூறல்கள் எமக்கு உணர்த்துகின்றன.

இந்த உண்மையை உணர முடியுமாக இருந்தால் நாம் பழைமைகளை மீட்டிக் கொண்டிருக்க மாட்டோம்; இஸ்லாமியப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிய நிலையில் நாம் புதிய சூழலுக்கு வருவோம்... அந்த சூழலைப் படிப்போம். பழைய பழக்கங்களைக் கைவிட்டு புதிய சூழலில் வாழ்வதற்கான வழிவகைகளை யோசிப்போம். அவ்வாறு யோசித்தால் விட்டு விலக வேண்டிய பழைமைகள் பின்பற்ற வேண்டிய புதுமைகள் எங்களுக்கு ஒரு சுமையாக இருக்க மாட்டாது.

“காலம், இடம், சூழல், வழக்காறு என்பன மாறும்போது பத்வா மாறும்” என்ற இஸ்லாமிய சட்டவாக்க விதியும் இதனையே கற்றுத் தருகின்றது.

எனினும், முஸ்லிம்களில் அநேகர் 4/21 ற்கு முற்பட்ட காலத்திலேயே வாழ விரும்புகின்றார்கள். 4/21 ற்குப் பிற்பட்ட புதிய சூழலுக்கு அவர்கள் இன்னும் வரவில்லை. அவர்கள் முயற்சிப்பதும் 4/21 இற்கு முற்பட்ட சூழலை நோக்கிச் செல்வதற்கே; புதிய சூழலை எதிர்கொண்டு பயணிப்பதற்கல்ல. காரணம், புதிய சூழலுக்குப் பொருந்தும் வகையில் மாறுவது சிரமமானது... பழகிய பழைய சூழலில் இருந்ததுபோல மாறாமல் இருப்பது சௌகரியமானது. இந்த நிலை எவ்வகையிலும் நன்மை தரப்போவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மை யாதெனில், நாங்கள் விரும்பினாலும் வெறுத்தாலும் உலகம் மாறிக்கொண்டே இருக்கும் என்பதாகும். அதில் சாதகமான மாற்றங்களும் வரும்; பாதகமான மாற்றங்களும் வரும். இயற்கையான மாற்றங்களும் நிகழும்; செயற்கையான மாற்றங்களும் நிகழும்.

மாற்றங்கள் எந்தக் கோணத்திலிருந்து வந்தாலும் மாறாத அடிப்படைகள் மீது உறுதியாக நின்ற வண்ணம் அவற்றை எதிர்கொண்டு படிப்பினைபெற்று அந்த மாற்றங்களுக்கேற்ப தங்களையும் மாற்றிக் கொண்டு புதிய பாதையில் பயணிக்கத் தவறுபவர்கள் வரலாற்று நீரோட்டத்திலிருந்து ஒதுக்கப்படுவார்கள்.

எனவே 4/21 ற்குப் பின்னுள்ள காலத்திற்கு வருவோம். இக்காலத்திற்கான வழிகாட்டல்களைப் பெறுவோம். அவற்றின் துணையோடு ஒரு சமாதான சமூகமாகவே தொடர்ந்தும் பயணிப்போம்.

# 08

## நோயின் தீவிரத்தைக் குறைத்தல்

*இலங்கையில் வரட்சி என்றால் அது இலங்கை மக்களின் பிரச்சினை. இலங்கையில் வெள்ளம் என்றால் அதுவும் இலங்கை மக்கள் அனைவரும் எதிர்கொள்ளவேண்டிய பிரச்சினையே!*

*சூரியன் உதிப்பதும் மறைவதும்... இரவு பகல் மாறுவதும்... பருவ காலங்கள் வருவதும்... இலங்கையில் வாழும் ஒரு குறிப்பிட்ட சாராருக் காகவல்ல; அனைத்தும் இலங்கை மக்களுக்காகவே.*

*அதேபோன்று இலங்கையில் நீண்ட காலமாக வளர்ந்து வருகின்ற தொரு நோய்தான் இனவாதமாகும். ஓர் இனத்தால் மற்றோர் இனத்திற் கெதிராக அது பிரயோகிக்கப்பட்டாலும் அது பாதிக்கப்பட்ட இனத் தின் பிரச்சினை மட்டுமல்ல; மாறாக, அது இலங்கையின் பிரச்சினை. அவ்வாறுதான் அதனை உலகம் பார்க்கின்றது.*

இந்த நோயைக் குணப்படுத்த வேண்டியவர்கள் இலங்கை மக்கள் அனைவரும் தான். அவர்கள் குணப்படுத்துவார்களா அல்லது மேலும் வளரவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்களா என்பது எங்களுக்குத் தெரியாது. எவ்வாறாயினும், நோயின் கடுமை அதிகரித்துக் கொண்டு செல்வதனையே நாம் அவதானிக்கின்றோம். எனவே, அந்த

நோய் தீவிரமடையாமல் பாதுகாப்பதில் சதாவும் கவனமுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும்.

அந்த முடிவுக்கு வந்தால், அந்தக் கொடிய நோய் எங்களது பிழையான நடத்தைகளால் வளர்ந்துவிடாதிருப்பதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எதிர்ப்பக்கத்தால் நோயை வளர்ப்பதற்கு எடுக்கப் படும் முயற்சிகளை சாத்வீகமாகவும் அவசியப்பட்டால் சட்டங் களினூடாகவும் அணுக வேண்டும்.

எங்களால் அந்த நோய் வளர்வதற்கு எத்தகைய காரணிகள் பங்களிப் புச் செய்யலாம் என்பதைப் பட்டியலிட்டு (சிறியவையோ பெரியவையோ) அவற்றை முற்றாக இல்லாமல் செய்யும் வகையில் அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். இயக்கங்கள், அமைப்பு கள் அனைத்தும் இந்தப் பணியை ஒருமுகப்படுத்திச் செய்ய வேண்டும்.

முறையற்ற பேச்சுக்கள், நடத்தைகள், ஒழுக்கங்கள், சமூக வலைத்தள பதிவேற்றங்கள் போன்ற அனைத்தும் நோயை அதிகரிக்கச் செய்வதற்கே உதவும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எமது செயற்பாடுகளில் இந்த அவதானம் இன்றியமையாததாகும்.

**4/21** பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய கும்பலைத் தவிர ஏனைய முஸ்லிம்கள் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வோடுதான் இருந்திருக் கிறார்கள். எனினும், மேலதிக கவனம் அதற்கு இப்போது அவசிப்படுகிறது என்பதை இங்கு வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

# 09

## தனித்தன்மையும் பொதுத்தன்மையும்

எந்தவொரு சமூகமும் தனக்குள் கருத்து வேறுபாடுகள் இல்லாமல் இருப்பதில்லை. கருத்து வேறுபாடுகளால் ஒவ்வொரு சமூகமும் பல கூறுகளாகப் பிரிந்தே இருக்கின்றது. முஸ்லிம் சமூகமும் இதற்கு விதி விலக்கானதல்ல.

கடந்த காலங்களில் இத்தகைய கருத்து வேறுபாடுகளை முரண் பாடுகளாக மாற்றி எங்களுக்குள் நாம் பிரச்சினைப்பட்டிருக்கிறோம். அதன் விபரீதங்களை அனுபவிக்க வேண்டியதொரு சூழலும் இப்போது வந்திருக்கின்றது. இதற்கு நாம் தீர்வு கண்டாக வேண்டும். அந்தத் தீர்வு நூறு வருடங்கள் பின்னோக்கிச் செல்வதல்ல. நூறு வருடங்களுக்கு முன்பு இவ்வாறானதொரு பிரச்சினை இருக்கவில்லை என்று பேசி தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முடியாது-இளவயதில் இருந்த ஆரோக் கியத்தைப் பேசி முதுமையின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாதது போல்.

இன்று முஸ்லிம் சமூகம் பல அமைப்புகளாக இருப்பது ஒரு யதார்த்த மாகும். அந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதிலுள்ள பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதே எமது கடமை. அதற்கான வழி அனைவரது சுதந்திரத்தையும் மதிக்கக் கற்றுக்கொள்வதாகும். அப்போது அவரவரது

தனித்துவங்களுக்கு அச்சுறுத்தல் இல்லை என்பது உறுதியாகி விடும்.

அதன் பிறகு சுட்டிக்காட்டப்பட வேண்டிய அல்லது தட்டிக்கேட்க வேண்டிய விடயங்கள் இருந்தால் அவற்றை மிக அழகிய மொழி மற்றும் அறிவுபூர்வமான அணுகுமுறை என்பவற்றினூடாக, பணிவு பிரதி பலிக்கும் வகையில், (தலைக்கனம் பீறிடும் வகையிலல்ல) முன்னெடுக்க வேண்டும். அறியாமல், ஆராயாமல் எந்தவொன்றையும் சமூகத்தளத்தில் முன்வைக்க முற்படக் கூடாது.

சமூகத்திலிருக்கும் எந்தத் தரப்பும் (மார்க்கத்திலோ அரசியலிலோ) பிறிதொரு தரப்பின் இருப்பை அச்சுறுத்தலாகப் பார்க்க வேண்டிய தில்லை; தீவிரவாதத்திற்குத் துணை போகின்றவர்களைத் தவிர. தீவிர வாதம் அதன் அறிகுறிகளோடு (பார்க்க - பக்கம்: 2, 3) தலைதூக்குவ தாகத் தெரிந்தால் சமூகத்தின் முக்கியஸ்தர்கள் ஒன்றிணைந்து கலந் துரையாடி பாதுகாப்புக்கான நடவடிக்கைகளில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு தரப்பும் பரஸ்பரம் தனதும் ஏனையோரதும் தனித்து வங்களுக்கு அச்சுறுத்தல் இல்லாது நடந்து கொண்டால், அடுத்ததாக அனைவரும் ஒன்று சேர்ந்து சமூகத்தின் பொது நலனில் மற்றும் நாட்டின் பொது நலனில் தமது கவனத்தைக் குவிக்கவும் செயல்படவும் முன் வரலாம். சமூகம் மற்றும் தேசம் என்பன ஒரு சுவராகும் அல்லது பாது காப்பு அரணாகும். அந்தச் சுவரின் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு சாரார் தமது சித்திரத்தை வரைந்திருப்பார்கள். ஒரு தரப்பினரின் சித்திரத் தோடு தமக்கு உடன்பாடில்லை என்ற காரணத்தால் குறிப்பிட்ட அந்த சித்திரம் இருக்கும் இடத்தை உடைப்பது அறிவீனமாகும். காரணம், சுவரின் எந்த இடம் உடைக்கப்பட்டாலும் அது சுவரையே பலவீனப் படுத்தும்; வெறும் சித்திரத்தை மட்டுமல்ல. எனவே, சமூகம், தேசம் என்ற சுவரைப் பாதுகாப்பது அனைவரதும் கடமை. அது பொது நலன் சார்ந்த கடமையும் கூட. அதில் அனைவரும் ஒன்றிணைந்தாக வேண்டும்.

இந்த அணுகுமுறை சமூகத்திலும் தேசத்திலும் மேம்படுத்தப்பட்டால் அது அனைவரது நலனையும் பாதுகாப்பதாகவே நிச்சயம் இருக்கும். அதற்கான உதாரணங்களும் உலகில் நிறையவே இருக்கின்றன.

10

## ஆயுள் குறைந்தவை மற்றும் ஆயுள் நீண்டவை

*18 நாட்களில் ஒரு கோழியை வளர்த்து உணவாக்கியிருக்கிறார்கள்; 48 நாட்களில் உணவாக்கப்பட்ட மற்றுமொரு கோழியும் இருக்கிறது. நீங்கள் எதனை விரும்புவீர்கள்?*

அவசரமாக உணவாக்கி உண்பதற்கு சிலர் ஆசைப்படுகிறார்கள். அவ்வாறு உண்ணும் உணவுகள் உடம்பில் நச்சுத்தன்மை ஏற்படுவதற்கும் அசாதாரண நிலைமைகள் தோன்றுவதற்கும் வழிவகுக்கும் என்பதை அவசரத்தில் அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

எந்தவொன்றும் வளர்வதோ வீழ்வதோ சில நியதிகளுக்குட்பட்ட வையாகவே இருக்கின்றன. அவசரமாக வளரும் ஒவ்வொன்றும் அவசர மாக வீழ்ந்து விடுகின்றது. ஆறுதலாக வளரும் ஒவ்வொன்றும் நீடித்து நிற்கின்றது.

மனிதர்களை இனவாதத்தால், மதவாதத்தால், வெறிகளால், குரோதங் களால் அவசரமாக முறுக்கேறச் செய்யலாம். அன்பால், நல்ல பண்பு களால், மனித நேயத்தால் அவர்களை வளர்க்க முற்பட்டால் அத்த கைய வளர்ச்சி மெதுவாகத்தான் இருக்கும்.

*யாரோ அவசரப்படுகிறார்கள் என்று நாங்கள் அவசரப்பட வேண்டிய தில்லை. தீவிரவாதிகளும் பயங்கரவாதிகளும் அவசரப்பட்டு என்ன செய்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.*

*குழந்தைகள், பாடசாலைச் சிறார்கள், வாலிபர்கள், பெண்கள், வயோ திபர்கள், படித்தவர்கள், பாமரர்கள் அனைவரையும் அன்பாலும் நல்ல பண்புகளாலும் மனித நேயத்தாலும் வளர்த்துவிட முயற்சி செய்யுங்கள். அந்த வளர்ச்சி கண்ணுக்குத் தென்படாத வளர்ச்சிதான். எனினும், அதுதான் நிலையான வளர்ச்சியாகும். அதன் பயனை நாங்கள் இல்லா விட்டாலும் எமது அடுத்த சந்ததியினர் அனுபவிப்பார்கள். குரோதம், பகை, வெறுப்பு என்பவற்றை வளர்த்தால் எங்களை விட எங்களது சந்த திகளது காலம் சர்ச்சைக்குரியதாக இருக்கும்.*

*பலவீனர்களின் பலம் நற்குணங்களிலும் நற்செயல்களிலும்தான் இருக்கின்றது என்பதை உறுதியாக நம்புங்கள். காரணம், உலகின் எந்தப் படைகளாலும் அவற்றைத் தோற்கடிக்க முடியாது!*

*பயங்கரவாதிகள் நற்குணங்களையும் இழந்தார்கள்; நற்செயல் களையும் இழந்தார்கள். இறுதியில் அவர்களே அவர்களை அழித்துக் கொண்டார்கள். பேரழிவையும் ஏற்படுத்தினார்கள்.*

*நற்குணங்களாலும் நற்செயல்களாலும் ஒன்றையும் அழித்துவிட முடியாது; ஆக்குவதைத் தவிர. எனவே, கவலைகளை மறந்து நற்குணங் களையும் நற்செயல்களையும் வளர்த்துவிட முயற்சியுங்கள்.*

# 11

## இருப்பும் பாதுகாப்பும்

நாட்டின் பாதுகாப்புக்கான எமது கடமையைத்தான் இந்த ஏட்டின் முதல் அம்சமாகப் பார்த்தோம். இங்கு முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு தொடர்பில் சில ஆலோசனைகளை முன்வைக்கிறோம்.

எமதும் எமது உடமைகளினதும் பாதுகாப்பு முக்கியமானது. பாதுகாப்பு அச்சுறுத்தல் ஒன்றை ஊகிக்க முடியுமாக இருந்தால் முன்னேற்பாடாக எதைச் செய்ய வேண்டும்? அசம்பாவிதத்தின் போது எதைச் செய்ய வேண்டும்? அசம்பாவிதத்தின் பின் என்ன செய்ய வேண்டும்? என்பன போன்ற தெளிவுகளை எமது நாட்டின் சட்டங் களிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். சட்டங்களுக்குப் புறம்பாக எதனையும் செய்ய முயற்சிக்க வேண்டாம்.

இது குறித்து சட்ட விளக்கங்களைப் பெற்றவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள் என்பதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். குறித்த சட்டங்கள் பற்றிய புரிதலையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

அச்சுறுத்தல் வரலாம் என்பதை ஊகிக்கும் நேரத்திலிருந்து, அசம்பா விதம் ஒன்றை எதிர்கொள்வது வரை, எல்லாக் கட்டங்களிலும் நாம்

எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைச் சட்டத்திலிருந்தே நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சட்டத்துக்கமைவாகவே நாம் செயல்படவும் வேண்டும்.

மனிதனது உடல், உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்ப தற்கு சட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதேநேரம், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கின்ற, சட்டம் ஒழுங்கு என்பன பாதுகாக்கப் பட்டனவா என்பதை உறுதிப்படுத்துகின்ற நிறுவனங்களும் இருக் கின்றன.

அத்தகைய நிறுவனங்களோடு நெருக்கமான உறவுகளைப் பேணி, அந்நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயல்படுவது எமக்கும் நாட்டுக்கும் என்றும் பயனுள்ளதாகவே இருக்கும்.

# 12

## போதும் சுவர்கள், பாலம் கட்டுவோம்!

*சம தரையில் சுவரெழுப்பி ஒன்றாக இருந்ததை இரண்டாக்கிவிடப் பார்க்கிறார்கள் சிலர். பள்ளத்தாக்குகளுக்கு மேலால் பாலம் கட்டி பாரிய இடைவெளிகளை இணைத்துவிடப் பார்க்கிறார்கள் மற்றும் சிலர்.*

நாங்கள் இரண்டாவது வகையினராக இருக்க வேண்டும். இரண்டாவது வகையினரோடு சேர்ந்து செயற்படவும் வேண்டும்- அவர்கள் யாராக இருந்த போதிலும் சரியே! இந்த வகையில் சுவர் எழுப்பும் மேசன்மார்களைவிட பாலம் கட்டும் என்ஜினியர்களின் தேவை இன்று அதிகமாக இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

வார்த்தைகள், நடத்தைகள், நடை உடை பாவனைகள், வியாபார நடவடிக்கைகள், பாதை ஒழுங்குகள், வைபவ முறைமைகள், அரசியல் செயல்பாடுகள், தேர்தல் பிரசார ஒழுங்குகள், ஏன் மார்க்கப் பிரசார ஒழுங்குகள் உட்பட வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் மூலப்பொருட்களாகக் கொண்டுதான் இந்தப் பாலத்தை நாம் கட்ட வேண்டும்.

இது சாதாரண ஒரு பணியல்ல. மார்க்கத்தால் சிலர் சுவர் எழுப்பி விடலாம். அதேநேரம் வியாபாரத்தால் சிலர் பாலம் கட்டுவார்கள். ஒருவர் கட்டும்போது அடுத்தவர் உடைக்கும் வேலையைச் செய்யக் கூடாது. இத்தகைய முரண்பாடுகள் கடந்த காலத்தில் இருந்திருக்கலாம். எனினும், இனிவரும் காலங்களில் சிலர் கட்டவும் சிலர் உடைக்கவும் முடியாது; அல்லது சிலர் பாலம் கட்டும் போது மற்றும் சிலர் சுவர் எழுப்பும் வேலையை செய்யவும் முடியாது.

சில சிறிய நடத்தைகள் கூட சிலபோது ஒரு சுவரை எழுப்பி விடுகின்றன; அல்லது கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பாலத்தை உடைத்துவிடுகின்றன என்பது பலருக்குப் புரிவதில்லை. இத்தகைய தவறுகளை வெளிப்படையாக எடுத்துக் கூறினால் கூரை இடிந்து விழுமோ என்று பயப்படவும் வேண்டியிருக்கிறது.

அவ்வாறில்லாமல், பாலம் கட்டும் வேலையை அனைவரும் கலந்தா லோசித்துத் தீர்மானங்கள் எடுத்தே செய்ய வேண்டியிருக்கின்றது.

இந்த வகையில், வீட்டு மதில்களை உயர்த்திக் கட்டும் வேலைகளைக் குறைத்துக்கொண்டு பாலம் கட்டும் பணிக்கு நேரம், காலம், உழைப்பு என்பவற்றை அதிகமாகக் கொடுக்க அனைவரும் முன்வர வேண்டும். சம தரையிலிருந்த சமூகமும் தேசமும் பள்ளத்தாக்கு ஒன்றினால் பிரிக் கப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கின்ற சூழலில், பாலத்தை மறந்து மதில்களை எழுப்பிக்கொண்டிருக்கும் வேலையில் ஈடுபட்டிருக்க முடியாதல்லவா? ஒவ்வொரு சாராரும் தங்களைக் காத்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதைக் குறைத்து மதிப்பிட நாம் முயலவில்லை. அதேநேரம், சமூகங்களுக்கிடையிலான பாலம் பழுதாகியிருப்பதையும் அந்தப் பழுதை எங்கள் பக்கத்தால் சரி செய்ய வேண்டியிருப்பதையும் நாம் புறக்கணிக்க முடியாது. அதற்கான ஒன்றிணைவும் கலந்தாலோ சனையும் இன்றைய முன்னுரிமைகளாகக் கொள்ளப்பட வேண்டும்.

13

## விசாலமான உள்ளம்

*பல காரணங்களால் உலகம் நெருக்கடிமிக்கதாக மாறலாம்; அது இயல்பில் விசாலமானதாக இருந்த போதிலும் கூட.*

*இன்னும் பல காரணங்களால் உள்ளம் விசாலமானதாக மாறலாம்; அது நெருக்கடிமிக்க நெஞ்சுக்கூட்டுக்குள் இருந்த போதிலும் கூட.*

*4/21 தாக்குதலின் பின் பரந்த வானமும் விரிந்த பூமியும் எங்களுக்கு ஒருவகையில் ஒடுங்கியது போன்றாகி விட்டன. அதனால் சிலர் நாட்டை விட்டே சென்று விட்டார்கள். போவதற்கு தயாராகிக் கொண்டிருக் கிறார்கள் மற்றும் சிலர். அவர்கள் உலகத்தைப் பார்த்தார்கள்... உள்ளத்தைப் பார்க்கவில்லை என்றே தோன்றுகின்றது.*

*உலகம் விரியலாம், சுருங்கலாம். எனினும், உள்ளம் சுருங்குவதற்கு அனுமதிக்கக் கூடாது. உள்ளம் சுருங்கிவிட்டால் எங்குமே வாழ முடியாது. உள்ளம் சுருங்காதிருப்பதற்கு செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்:*

*உன்னதமான சிந்தனைகளை உள்வாங்க வேண்டும். அப்போது உள்ளம் விரிந்ததாகவே இருக்கும். எண்ணங்கள் மலர்ந்த வண்ணமே இருக்கும்.*

உதாரணமாக "மனிதர்கள் அனைவரும் ஆதமின் சந்ததிகள்; ஒரு தாய் மக்கள்" என்ற சிந்தனை ஒருவரது உள்ளத்தில் பதிந்துவிட்டால் மனித சமூகத்தில் இருக்கும் நல்லவர்கள், கெட்டவர்கள் அனைவரையும் அவர் ஒரு குடும்பமாகத்தானே பார்ப்பார்! ஒரு தாயின் பிள்ளைகளுக்கு மத்தியில் நல்லவனும் கெட்டவனும் இருக்க முடியுமானால் ஆதமின் சந்ததிகளிடையே அவ்வாறானவர்கள் ஏன் இருக்க முடியாது! இருந்தால் ஒரு குடும்பத்தை அணுகுவதுபோல ஏன் அவர்களை அணுக முடியாது! நபிமார்கள் மனித சமூகத்தை அவ்வாறுதானே அணுகியிருந்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டுமல்லவா?

இதற்கு மாற்றமாக, மனிதர்களை வர்க்க பேதங்களோடும் இனப் பாகுபாடுகளோடும் பார்த்தால் ஒருவரது உள்ளம் அவரது இனத்திற்கு மட்டுமானதாக, அவரது வர்க்கத்துக்கு மட்டுமுரியதாக சுருங்கி விடுகின்றது. ஏனைய அனைவரும் அவரது உள்ளத்திலிருந்து வெளியேறி விடுகின்றனர். அத்தகைய ஒருவருக்கு வேற்று இனத்தவர்களோடு வாழ்வது எப்படிப்போனாலும் அவர்களுடனான சகவாசமே பிடிக்காது.

இவ்வாறு மனித உள்ளத்தை சுருக்குவதிலும் விசாலமாக்குவதிலும் ஒருவர் விசுவாசிக்கின்ற கோட்பாடுகளுக்கு பெரும் பங்கிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

அந்த வகையில் இன்றைய முஸ்லிமின் சிந்தனைகள் மீட்டிப் பார்க்கப்பட வேண்டும். தீவிரவாதம் என்பது மிகவும் குறுகியதொரு சிந்தனையாகும். நான்கு அங்குல குழாயிலிருந்து வரும் நீரை அரை அங்குல குழாய்க்கு சுருக்கினால் அது பீறிட்டு வெளிவருவது போல, தீவிரவாதமும் பீறிடுகின்றது. அதன் வேகம் அகோரமாகின்றது.

4/21 தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகள் தமது குழுவினரை மட்டும்தான் உலகில் நம்பினார்கள். அவர்களிடையே அவர்கள் நேசம் பாராட்டினார்கள். அவர்கள் மட்டும்தான் சரியான பாதையில் செல்வதாக மார்தட்டினார்கள். அந்தக் குறுகிய சிந்தனைகள் மற்றும் அத்தகைய சிந்தனைகளை உள்வாங்கிய உள்ளங்கள் எத்துணை ஆபத்தை விளைவித்தன என்பது அனைவருக்கும் தெரியும்.

அதேபோன்றுதான் இனவாத சிந்தனைகள் மற்றும் மதவாத சிந்தனைகளை உள்வாங்கிய உள்ளங்களும். அத்தகைய உள்ளங்கள் மனிதர்களைக் கூறுபோடுகின்றன. ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏனைய அனைவரையும் ஒதுக்கிவிடுகின்றன அல்லது உள்ளங்களிலிருந்து வெளியேற்றி விடுகின்றன.

பயங்கரவாதிகள் இந்தக் கைங்கரியத்தில் முதலிடம் வகிக்கிறார்கள்; தீவிரவாதிகள் மற்றும் இனவாதிகள் இரண்டாம் இடத்தை வகிக்கின்றார்கள். அவர்கள் வகிக்கும் இடத்தைப் பொறுத்து அவர்களால் ஏற்படும் பாதிப்புகளும் கூடிக் குறைகின்றன.

இருப்பினும், எமது கவனம் உன்னதமான சிந்தனைகள் மீதே இருக்க வேண்டும். அவற்றை உள்வாங்கி மேலும் மேலும் எமது உள்ளங்களை விரிவுபடுத்த வேண்டும். விசாலமான உள்ளங்களோடு நாங்கள் நடமாட வேண்டும்.

பன்மைத்துவத்தை இறைவனின் ஏற்பாடுகளில் ஒன்று என இஸ்லாம் கூறுகின்றது. இயற்கையிலும் மனித இனத்திலும் சிந்தனைகள் மற்றும் கருத்துக்களிலும் பன்மைத்துவம் ஒரு நிதர்சனமாக என்றும் இருக்கவே செய்யும். இந்த உண்மையை உணர்ந்தவர்களால் பன்மைத்துவத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட மாட்டாது.

மலேசியாவைப் பாருங்கள். முஸ்லிம்கள் அங்கு 52% வீதம் மட்டுமே. சிறியதொரு விகிதாசார வேறுபாட்டிலேயே அவர்களது பெரும்பான்மை தங்கியிருக்கின்றது. எனினும், அங்குள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு முஸ்லிம்களால் எந்தவொரு பிரச்சினையும் இல்லை. பிரதிகூலங்களை விட அங்குள்ள சிறுபான்மையினர் அனுகூலங்களையே அனுபவிக்கின்றனர். குறிப்பாக, சீன பௌத்தர்கள் மலேசியப் பொருளாதாரத்தில் கணிசமானளவு தாக்கம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கிறார்கள். எனினும், அவர்கள் அங்கு பாதுகாக்கப்படுகின்றார்கள்.

பரந்த மனப்பான்மை, விசாலமான உள்ளம், பெரிய மனசு என்பவற்றிக்கு இப்படி எண்ணற்ற உதாரணங்கள் இருக்கின்றன. முஸ்லிம்கள் அந்த உதாரணங்களுக்குரியவர்களாகவே இலங்கை மண்ணில் வாழவேண்டும்.

14

## முஸ்லிம்களின் அரசியல்

*சிங்கள அரசியல், முஸ்லிம் அரசியல், தமிழர் அரசியல் என இலங்கையின் அரசியல் பயணங்கள் வெவ்வேறு திசைகளில் முன் செல்வது எவருக்கும் எந்த நன்மையையும் தரப்போதில்லை. ஆட்சிக் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு கதிரையில் அமர்ந்திருப்பவர் களுக்கு மட்டுமே இந்த அரசியல்களால் நன்மை கிடைக்கின்றது.*

*இலங்கையின் இந்த அரசியல் போக்கை மாற்ற முடியுமா, முடியாதா என்பது பெரும்பான்மையினரின் கையிலேயே தங்கியிருக்கிறது. பெரும்பான்மை மக்களிடையே இந்த அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்று சிந்திப்பவர்கள் தற்போது உருவாகியிருக்கிறார்கள்.*

*இந்நிலையில் முஸ்லிம்கள் தொடர்ந்தும் உரிமை அரசியலைத் தான் முன்னெடுத்துக் கொண்டிருப்பார்களா?*

*சிங்கள அரசியலும் உரிமை அரசியலாகி அதன் விளைவாக தமிழர் மற்றும் முஸ்லிம் அரசியல்களும் உரிமை அரசியல்களாக மாறிப்போ னால் நாடு எங்கே செல்லும்? இந்த அரசியல் கலாசாரத்தால் இனவா தமும் கூர்மையடைந்திருக்கின்றது. நம் நாட்டின் அரசியல் இப்படிப்*

போனால் அரசியல்வாதிகளைத் தவிர வேறு எவரும் நன்மையடைய மாட்டார்கள். இலங்கையின் எதிர்காலம் ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கும் காலமாகத்தான் மாறும்.

எமது அரசியலின் இந்நிலை மாற வேண்டும். எனினும், தற்போது சுக்கானைப் பிடித்திருப்பவர்களுக்கு நாங்கள் இதனை எடுத்துக்கூறி உடனடியாக மாற்றங்களைக் கொண்டுவந்துவிட முடியாது. இருப் பினும், குறித்த மாற்றத்திற்காக முஸ்லிம் அரசியல் தலைவர்களும் முஸ்லிம் வாக்காளர்களும் தங்களை தயார்படுத்தலாம். அந்த மாற்றத் திற்கான முன்மொழிவொன்றை இங்கு முன்வைக்கின்றோம்.

இந்த முன்மொழிவு மூன்று அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்.

1. இலங்கைக்கான அரசியல் கலாச்சாரம் ஒன்றை நோக்கிச் செல்லுதல்.

2. பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக இருத்தல்.

3. அனைவருக்கும் அபிவிருத்தி என்ற பாதையில் பயணித்தல்.

இந்த அரசியலுக்கு என்ன பெயர் வைப்பது என்று தெரியவில்லை. எனினும், நாட்டிலுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இந்த மூன்று முன்னெடுப்புகளாலும் எய்தப்படலாம்.

நடந்து முடிந்த அரசியல் போராட்டம் அதற்கான சிறந்ததொரு எடுத்துக்காட்டாக இருப்பதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தவறு செய்திருந்தால் வீதியில் இறங்கி, உண்ணாவிரதமிருந்து நீங்கள் போராட வேண்டியதில்லை. சட்டத்தின் மூலம் விசாரணை செய்து குற்றத்தை நிரூபியுங்கள்; நாங்கள் விலகி இடம் தருகிறோம் என்று முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் இராஜினாமா செய்தமைதான் அது.

இது அனைவரையும் விழிப்படையச் செய்த ஓர் அரசியல் கலாச் சாரமாகத் திகழ்ந்தது எனலாம். இத்தகைய ஓர் அரசியல் முன்னெடுப்பு இனத்திற்கானதாக மட்டுமன்றி தேசத்திற்கானதாகவும் இருக்க வேண்டும்.

முஸ்லிம்களின் அரசியல் ஈடுபாடு இந்தத் திசையில் பயணிப்பதற் காக வாக்களிப்புக் கலாசாரத்திலும் மாற்றம் கொண்டுவரப்படல் வேண்டும்.

இனவாத அரசியல், உரிமைப் போராட்ட அரசியல், பேரம் பேசும் அரசியல், கிங் மேக்கர் அரசியல், சந்தர்ப்பவாத அரசியல், மூர்க்கத்தன மாக முட்டி மோதும் அரசியல்... அனைத்தையும் நாடு கண்டிருக்கிறது. இதுபோன்ற அரசியல்களை செய்து செய்துதான் இப்போதுள்ள நாட்டை அனைவரும் கட்டியெழுப்பியிருக்கிறார்கள். தொடர்ந்தும் இதே வழிமுறைகளைப் பின்பற்றி நாட்டின் அரசியல் முன்னெடுப்புக் கள் செல்லுமானால் அதன் எதிர்காலத்தை நினைக்கவே பயமாக இருக்கிறது.

இனவாதச் சூட்டில் குளிர்காய்ந்து உணர்ச்சி அரசியல் செய்வதற்கும், நாட்டு நலன் மற்றும் மக்கள் பிரச்சினைகள் என்பவற்றை முன்னிறுத்தி அறிவுசார் அரசியல் செய்வதற்குமிடையிலான வேறுபாட்டை யாராவது முன்வந்து செய்து காட்ட வேண்டுமல்லவா?

சகோதர சமூகத்தவர்களில் சிலர் அத்தகைய அரசியலை முன்னெடுக் கிறார்கள். அவர்களோடு சமாந்தரமாக நின்று மேலே குறிப்பிடப்பட்ட மூன்று ஆலோசனைகளின் அடிப்படையில் முஸ்லிம்கள் ஏன் தமது அரசியலை முன்னெடுப்பது பற்றி சிந்திக்கக் கூடாது?

# 15

## இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விதி

“இஸ்லாத்தில் இது இருக்கின்றது; ஆனால் இது இல்லையல்லவா?” என்ற வினா எழுப்பப்பட்டால் “இல்லை, இஸ்லாத்தில் அனைத்து மிருக்கிறது” என்று கூற முடியுமாக இருக்க வேண்டும். அப்போது தான் அது நிறைவான மார்க்கமாக இருக்கும் நிறைவான மார்க்கம் என்ற வகையில் இறுதியாக அனுப்பட்ட இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஒரு பொறுப்பை அல்லாஹ் வழங்கியிருந்தான். “கோட்பாட்டிலும் நடைமுறையிலும் எந்தக் குறையும் இல்லாமல், போதாமைகள் ஏற்படாமல் மார்க்கத்தை அவர்கள் நிறைவு செய்துவிட வேண்டும்” என்பதே அந்தப் பொறுப்பு.

அத்தகையதொரு பொறுப்பு அன்னாருக்கு முன்பதாக அனுப்பட்ட நபிமார்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தமது காலத்துக் கும் சூழலுக்குமேற்ற வகையில் அல்லாஹ்விடமிருந்து பெற்ற வழி காட்டல்களை வைத்து சமூகத்தை வழிநடத்தினார்கள்.

இறுதி நபியின் மறைவுக்குப் பின்னர் அவர்கள் பூரணப்படுத்திய

மார்க்கம் என்றும் நிறைவானதாகவே இருக்கும். எனினும், முஸ்லிம்கள் எத்தகைய சூழலில் வாழ்கிறார்களோ அந்த சூழலுக்கு இணக்கமான வற்றை அவர்கள் தமது மார்க்கத்திலிருந்தும் மார்க்க விளக்கங்களிலி ருந்தும் பெற வேண்டும். அந்த விளக்கங்களின் துணையுடனேயே மக்களை அவர்கள் வழிநடத்த வேண்டும். வேறு ஒரு சூழலில் அமுல் நடத்தப்படுபவற்றை கண்களை மூடிக் கொண்டு இறக்குமதி செய்ய அவர்கள் முற்படக் கூடாது; தமது சூழலுக்குரியதை மற்றுமொரு சூழலில் திணிக்கவும் அவர்கள் முற்படக் கூடாது.

இது மார்க்க மேதைகளான எமது முன்னோர்கள் அனைவரும் இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கண்டிப்பாகப் பின்பற்றியதொரு விதியாகும்.

இந்த விதி எமது நடைமுறைகளில் எந்தளவு கருத்தில் கொள்ளப் பட்டது; எந்தளவு புறக்கணிக்கப்பட்டது என்பதையும் தற்போதைய சூழலில் நாம் பரீட்சித்தாக வேண்டும். கடந்த காலங்களில் எமது நடை உடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் நடவடிக்கைகள் யாவும் இந்த விதியை அனுசரிப்பதாக இருந்தனவா? சமூகத்தை வழிநடத் தியவர்கள் இந்த விதியை கருத்தில் கொண்டுதான் மார்க்கத்தின் வழி காட்டல்களை வழங்கினார்களா? இந்த விதி தொடர்பிலான எமது புரிதல் கடந்த காலங்களில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் பற்றி எழுப் பப்பட்ட சர்ச்சைகளுக்குத் தீர்வை வழங்கும் விதமாக இருந்ததா? போன்ற வினாக்களுக்கு விடை காண்பது- மார்க்கம் தொடர்பில் எழுப்பப்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து தப்பெண்ணங்களை யும் போக்கி நடுநிலையாக சிந்திப்பவர்களுக்கு இஸ்லாம் பற்றிய மகிமை யையும் உணர்த்துவதாக இருக்கும், இன்ஷா அல்லாஹ்.

16

## வாழ வைத்து வாழுதல்

பயங்கரவாதிகள் அழித்து விட்டு அழிந்து போவதற்காக வாழ்ந் தார்கள். உலகில் எண்ணற்றவர்கள் எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டுமென்பதற்காக வாழுகிறார்கள்.

நாங்கள் அவ்வாறானவர்கள் அல்ல. வாழ வைப்பதற்காக வாழ்வதே உண்மையில் உயர்ந்த வாழ்வாகும். நீதியை வாழ வைக்க வேண்டும். சமாதானத்தை வாழ வைக்க வேண்டும். சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் வாழ வைக்க வேண்டும். நன்மைகளையும் நற்குணங் களையும் வாழ வைக்க வேண்டும். உண்மைகளையும் சத்தியங்களையும் வாழ வைக்க வேண்டும். நிராசையடைந்த உள்ளங்களை வாழ வைக்க வேண்டும். வறுமைப்பட்டோரை வாழ வைக்க வேண்டும். ஊனமுற் றோரையும் விஷேட தேவையுடையோரையும் அநாதைகள் மற்றும் கைவிடப்பட்டோரையும் வாழ வைக்க வேண்டும். மரம், செடி, கொடி களை வாழவைக்க வேண்டும். இயற்கையை தூய்மைமிக்கதாகவும் பசுமை நிறைந்ததாகவும் வாழ வைக்க வேண்டும்.

மொத்தத்தில் சமூகத்தையும் தேசத்தையும் வாழ வைப்பதற்கு எங்களால் முடியுமான அனைத்தையும் செய்ய வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருக்கின்ற உயரிய, உன்னத மான சிந்தனைகளை முதலில் வாழவைக்க வேண்டும்.

நாங்கள் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறோம், எதனை எதனை யெல்லாம் வாழ வைத்திருக்கிறோம் என்று ஒரு பட்டியல் இட்டால் விடை எவ்வாறிருக்கும் என்று கணக்கிட்டுப் பாருங்கள்.

யாருக்கும் பயனில்லாமல் வாழ்ந்துவிட்டுப் போவது மனித வாழ்க் கையின் அர்த்தத்தையே கேள்விக்குறியாக்கிவிடும் என்பதை நாம் உணர வேண்டும்.

17

## கொடுத்து வாழுதல்

சுரண்டி வாழ நினைக்கின்றது இன்றைய உலகம். அபகரித்து, ஆக்கிரமித்து, கொள்ளையடித்து, வாழ்வதற்கான பல்வேறு கலைகளை கவர்ச்சிகரமான பதாதைகளோடு அறிமுகப்படுத்தியும் வருகின்றன இன்றைய தீய சக்திகள். இலாபங்களின்றி, ஆதாயங்களின்றி மகனுக்குத் தந்தையாயினும் சரி; மனைவிக்குக் கணவனாயினும் சரி எந்தவொன் றையும் மனமுவந்து கொடுக்கும் பரோபகார உள்ளம் இன்று அரிதாகிக் கொண்டு செல்கிறது. மொத்தத்தில், உலக ஆதாயங்களைப் பூஜித்து வணங்கி வழிபடும் ஆபத்தானதொரு போக்கு இன்று வளர்ந்து வருகின்றது. மதங்கள், மத வழிபாட்டுத்தலங்கள், மதங்களின் புனிதத்துவங்கள் அனைத்தும் இந்தப் பூஜைக்காகப் பலியிடப்படுகின்றன.

பதவி, பணம், செல்வாக்கு, புகழ் என்பவற்றின் உச்சத்தை சென்றடைய வேண்டும் என்ற பேராசையோடு நடைபெறுகின்ற இந்த உலக ஆதாய வழிபாட்டை திசை திருப்பும் பலம் யாரிடமாவது இருக்கிறதா என்று எவரும் ஏங்க வேண்டியதில்லை.

நிச்சயமாக இருக்கிறது. தன்னலம் பாராது கொடுக்கின்ற பண்பி னால் மட்டுமே இந்தப் போக்கை திசை திருப்பலாம்.

புன்சிரிப்பைக் கொடுப்பதிலிருந்து, நல்ல வார்த்தையைக் கொடுப்ப திலிருந்து துவங்கி, உழைப்பைக் கொடுப்பது. சிரமங்களைக் கொடுப்பது. பணம் பொருள் உதவிகளைக் கொடுப்பது. தேவைப்பட்டால் பதவி களையும் விட்டுக் கொடுப்பது வரை கொடுக்கும் பண்பை வியாபகம் செய்ய வேண்டும்.

'வாழ வைத்து வாழ்தல்' என்ற கோட்பாட்டை அமுல்படுத்துவ தாயின் 'கொடுத்து வாழ்தல்' என்ற பண்பு இன்றியமையாதது.

எனவே, கொடுக்கும் கலையைப் பயின்று முடியுமானவரை கொடுத்து வாழ முயற்சிப்போம்.

"பிரதியுபகாரங்களை எதிர்பார்க்காமல் கொடுத்து வாழ்வோம்!"

நாம் வாழும் சூழலில் எமது சக்திக்குட்பட்ட வகையில் சிறியனவோ பெரியனவோ எவற்றையெல்லாம் பகிர்ந்து கொள்ளலாம் என்று சிந்திப்பது இந்த மனித நேய செயல்பாட்டின் முதற்படியாகும்.

18

## சிவில் சமூகத்தின் அவசியம்

மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களை பௌத்த சமுகம், இந்து சமுகம், கிறிஸ்தவ சமுகம், முஸ்லிம் சமுகம் என வகைப் படுத்துகின்றோம்.

இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களை சிங்கள சமூகம், சோனக சமூகம், தமிழ் சமூகம் என அடையாளப்படுத்து கின்றோம்.

இலங்கை சமூகத்தை என்ன பெயர் கொண்டு அழைக்கப் போகின்றோம்?

இலங்கை சமூகத்திற்கு பெயர்தான் சிவில் சமூகம். அதாவது இலங்கைப் பிரஜைகளது சமூகம். அந்த சமூகம் பிரளயமொன்றால் இன்று அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றது. அந்த பிரளயம் வேறு எதுவுமல்ல, இனச் சமூகங்களினதும் மதச் சமூகங்களினதும் ஆர்ப்பரிப்பு தான் அது!

இலங்கை மக்கள் இனங்களையும் மதங்களையும் தூக்கிப் பிடித்து, நாட்டை மறந்து விட்டார்கள். அதனால் நாட்டின் பிரச்சினைகளை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. நாடு எந்நிலையில் இருந்தது? எங்கே

வந்திருக்கின்றது? அதன் எதிர்காலம் எப்பிடியிருக்கும்? நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதாயின் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படைப் பிரச்சினைகள் எவை? போன்றன குறித்து விழிப்படைந்த மக்களை இன்று காண முடியாதிருக்கிறது; அல்லது அவ்வாறு விழிப் படைந்தவர்கள் வலிமையற்றவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய வர்கள் எழுதுவதையோ பேசுவதையோ ஒருவரும் அலட்டிக் கொள்வ தில்லை. இனவாதம் பேசுவோரும் மதவாதம் பேசுவோரும்தான் நாட்டில் பிரபலம் பெற்று வருகிறார்கள்.

இனவாதம், மதவாதம் பேசாமல் அல்லது பேசுவோருக்கு ஆதரவு தராமல் நாட்டில் ஒருவரும் எடுபடமாட்டார்கள் என்ற நிலை உருவா கியிருக்கிறது. இது சிவில் சமூகத்தின் இருப்பையும் அதன் அவசியத் தையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது. நாட்டைப் பற்றியும் அதன் அடிப்படையான பிரச்சினைகள் பற்றியும் விழிப்புணர்வற்ற மக்கள் கூட்டமொன்றையே அது உருவாக்குகின்றது. ஒரு நாட்டின் மக்கள் இந்நிலைக்குச் சென்றுவிட்டால் அந்த நாட்டின் மேலிடத்தவர்களுக்குக் கொண்டாட்டம் தான். அவர்கள் சொல்வதை மக்கள் நம்புவார்கள். மீண்டும் அவர்களுக்கே வாக்களிப்பார்கள்.

எனவே, இனவாதமும் மதவாதமும் இன்னும் கூர்மையடையும்; பிரச்சினைகளும் தொடரும்.

இந்நிலையில் முஸ்லிம்களும் இனவாதிகளாக செயல்பட்டு, நாட்டில் நல்லதொரு சிவில் சமூகம் உருவாகின்ற வாய்ப்புக்குத் தடையாகி விடாமல் இருக்க வேண்டும். சிறந்ததொரு சிவில் சமூகத்தை உருவாக்க விரும்புகின்ற சகோதர சமூகத்தவர்களோடு சேர்ந்து பலமானதொரு சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக உழைக்க வேண்டும். குறிப் பாக, அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் இந்த இலக்கை அடையும் நோக்கில் சமூகத்தை வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இனரீதியாக அரசியல் செய்யாமல், நாட்டு நலனுக்காக அரசியல் செய்தால்... நாட்டின் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மயப்படுத்தினால்... குறித்த அந்த மாற்றங்கள் சிவில் சமூகத்தில் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

19

## உணர்ச்சியும் அவசரமும்

உணர்ச்சி அறிவை மங்கச் செய்து விடும். அவசரம் உணர்ச்சியைத் தூண்டிய காரணியையும் மறக்கச் செய்து விடும்.

பயங்கரவாதிகள் இரண்டுக்கும் ஆளானார்கள். முஸ்லிம்களுக் கெதிராக அரங்கேற்றப்பட்ட வன்முறைகள் மற்றும் முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிரான வெறுப்புப் பேச்சுக்கள் என்பவற்றால் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டார்கள். உணர்ச்சிவசப்பட்டே தீவிரவாதத்திற்குச் சென்றார்கள். பின்னர் முஸ்லிமக்ளையே அவர்கள் மறந்து விட்டார்கள்.

முஸ்லிம்களைக் காப்பாற்றுவதாகக் கற்பனை செய்து கொண்டு அவர்களைப் பாதாளத்தில் தள்ளி விட்டார்கள். அவர்களது உணர்ச்சி களும் அவசரங்களும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கான அவகாசத்தைகூட அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

இத்தகையவர்கள் ஒரு இனத்துக்கோ, மதத்துக்கோ, நாட்டுக்கோ, அழிவைத்தான் கொண்டு வருவார்கள்; ஆக்கத்தைக் கொண்டுவர மாட்டார்கள்.

பயங்கரவாதிகளையும் அவர்களோடு சம்பந்தப்பட்டவர்களையும் தவிர ஏனைய முஸ்லிம்கள் தமக்கெதிரான வன்முறைகள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்களால் மனம் பாதிக்கப்பட்டாலும் எதிர்த்தாக்கமுற்று மோது கின்ற நிலைக்குச் செல்லவில்லை என்பது உண்மையில் பாராட்டத்தக்க அம்சமாகும். அந்த நிலையை முஸ்லிம்கள் மேலும் வலுப்பெறச் செய்ய வேண்டும். அந்த நிலையை சீர்குலைக்கவே தீய சக்திகள் முயற்சிக்கும் என்பதை மறவாமலும் நாம் செயல்பட வெண்டும்.

உணர்ச்சிகளுக்கு அடிமைப்படும்போது நல்லவர்களும் தீவிரவா தத்தில் காலடி எடுத்து வைக்கிறார்கள். உணர்ச்சிவசப்பட்டவர்கள் அவசரப்படும்போது வன்முறையில் காலடி எடுத்து வைக்கிறார்கள்.

எனவே, சோதனைகளை நிதானமாகவே நாம் எதிர்கொள்ள வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு, அவசரப்பட்டு விவகாரங்களைத் தங்களது கைகளில் எடுத்துக் கொள்ள எவரும் முற்படக் கூடாது.

உணர்ச்சி தொடர்பில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட சாதகமான நிலை முஸ்லிம்கள் மத்தியில் இருந்தாலும் பாதகமான விடயங்களும் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துபவர்களும் சந்திகளை வளைத்து நின்று சிந்தனைக்கு வருபவற்றைப் பரிமாறிக் கொள்பவர் களும் வீறாப்பு, கிண்டல், கிளறல் போன்றவற்றைத் தவிர்த்துப் பேசப் பழக வேண்டும். அறிவோடும் ஆதாரத்தோடும் பேசுகின்றவர்களைத் தான் உலகம் மெச்சுகின்றது. அளக்காமல், நிறுக்காமல் பேசிக் கொண்டே இருப்பவர்களை சதாவும் சப்தமிட்டுக் கொண்டிருக்கும் ஜீவராசிகளைப் போன்றே உலகம் பார்க்கிறது.

ஆக, உணர்ச்சிகளை வெளிப்படுத்தாத, நிதானமிழக்காத சமூக மாக தொடர்ந்திருப்பதற்கு முயற்சிப்போம்; அதற்கான வழிகாட்டல் களையும் சமூகத்திற்கு வழங்குவோம்.

20

## பின்னடைவைக் கற்றுக் கொள்ளல்

*சோதனைகள் பல வகையாக இருக்கின்றன. அவற்றுள் முக்கியமான இரண்டு சோதனைகளை இவ்வாறு குறிப்பிடலாம்:*

*1. இல்லாமலாக்கும் சோதனை*

*2. இடமளிக்கும் சோதனை*

*சமூகங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சிக்கான இறை நியதிகளுக்கேற்ப ஒரு சமூகம் உலகில் வாழும் தகுதிகளை இழந்தால் அந்த சமூகத்தை இல்லாமலாக்கும் சோதனையை அல்லாஹ் அனுப்புவான்.*

*அத்தகைய சோதனைகள் முன்னைய நபிமார்களின் சமூகங்களுக்கே வந்துள்ளன. அந்த சோதனைகள் வந்தால் அழிவு மட்டும்தான் மிஞ்சுகின்றது. உலகில் அந்த சமூகங்களுக்கு மீட்சி இல்லை.*

*இடமளிக்கும் சோதனை அவ்வாறல்ல. தோல்விகளைக் கற்று, போதாமைகளை ஈடு செய்து, சரி என்று நினைத்துக் கொண்டிருந்த பிழையான கணிப்புகளை மாற்றி, மிகைப்படுத்தல்களைக் குறைத்து,*

மனிதர்கள் தம்மைத் திருத்திக் கொள்வதற்கு இடமளிக்கும் சோதனைகளே இரண்டாவது வகை.

“உங்களுக்கு ஏற்படுகின்ற எந்த சோதனையாக இருந்தாலும் அது உங்களது கரங்கள் சம்பாதித்தவையே. (உங்களது தவறுகளில்) பலவற்றை (தண்டிக்காமல்) அல்லாஹ் மன்னித்து விடுகின்றான்” என்ற குர்ஆனின் அறிவுறுத்தல் இங்கு நோக்கத்தக்கது.

ஆக, தோல்வி- பின்னடைவு- சோதனை என எதுவாக இருந்த போதிலும் அவற்றை இரண்டு கோணங்களில் நாம் பார்க்க வேண் டியிருக்கிறது.

i. குறிப்பிட்ட பின்னடைவுக்கு இட்டுச் சென்ற உலகச் சூழல் எப்படிப்பட்டது; அந்த சூழலில் யாரால் யாருக்கு அநீதியிழைக் கப்பட்டது; அதனை எதிர்கொள்வதற்கான சட்ட ஒழுங்கு மற்றும் சாத்வீக ஒழுங்குகள் எத்தகையன என்ற பார்வை.

ii. குறிப்பிட்ட பின்னடைவுக்கு ஆளானவர்கள் தங்களது நிலை மைகளில் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்? ஏற்பட்ட தோல்விக்கோ பின்னடைவுக்கோ வழிவகுத்த உள் காரணிகள் எவை? போதாமைகள் எவை? மிகை மதிப்பீடுகள் எவை? போன்றவற்றைக் கற்று தங்களுக்குள் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற பார்வை.

இதன் வழியில்தான் குர்ஆன் எங்களை அழைக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். பின்னடைவுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். பின்னடைவுக்கான காரணங்களை பிறர்மீது சுமத்தி விட்டு எல்லாம் அல்லாஹ்வின் ஏற்பாடு என்று முற்றுப்புள்ளி வைத்து விடாதீர்கள். அப்போது உங்களுக்கு வேலை இல்லாமல் போகிறது. நீங்கள் பொறுப்பற்றவர்களாக மாறிவிடுவீர்கள். பின்னடைவைக் கற்று முன்னோக்கிச் செல்வதற்கான வழிகளைச் தேடிக்கொள்ளுங்கள் என்பதே அந்த அழைப்பாகும்.

ஒரு மனிதனோ அல்லது ஒரு சமூகமோ தனக்கு வருகின்ற சிரமம், சோதனை, தோல்வி, பின்னடைவு போன்றவற்றிற்கு இன்னார் தான் காரணம், இவர்கள்தான் பிரச்சினை என்று தலையில் கட்டிவிட முயன்றால் அத்தகையவர்கள் உலகில் முன்னேற மாட்டார்கள்.

இன்னார்தான் காரணம் என்பதை ஆதாரங்களோடு நிரூபித்து நீதியைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது ஓர் உலக ஒழுங்காகும். போதாமைகளை நீக்கி, தவறுகளைத் திருத்தி, தம்மை சீர்படுத்திக் கொள்வது மார்க்க ஒழுங்காகும்.

இரண்டையும் செய்தால் சக்கரங்களின் 'எலய்ன்மன்ட்' சரியாக இருக்கின்றது என்று பொருள். ஒன்றைவிட்டு ஒன்றை செய்தால் ஒரு பக்க சக்கரம் 'பஞ்சர்' ஆகிவிட்டது என்று பொருள்.

21

## எங்களைப் பார்ப்பவர்கள் இருவகையினர்

*4/21 பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின் முஸ்லிம்களை இரண்டு விதமாகப் பார்ப்பவர்கள் உருவாகியிருக்கிறார்கள்.*

1. *ஒரு சாரார் 4/21 தாக்குதலுக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை உறுதியாக நம்புகிறார்கள். பயங்கர மானதெரு நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது என்பதும் இந்தத் தாக்குதல் மூலமாக இலாபமீட்ட முனைபவர்கள் இலாபமீட்டிக் கொள்வார்கள் என்பதும் அவர்களது நிலைப்பாடாக இருக்கின்றது. இந்த நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் முஸ்லிம்களைப் பார்த்துக் கூறுகின்றார்கள்: “நீங்கள் சஞ்சலப்பட வேண்டியதில்லை; குற்ற உணர்வுடன் வாழ வேண்டிய அவசியமுமில்லை; சுதந்திரமாக இருங்கள். நீங்கள் அனைவரும் இந்த நாட்டின் பிரஜைகளே.”*

இத்தகையோருக்கு அனைவரும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். உண்மைகளைக் கண்டறிந்து செயல்படும் இவர்களைப் பார்த்து எத்தகைய சர்ச்சைக்குரிய சூழலிலும் உண்மைகளைக் கண்டறிந்து செயல்படவே நாமும் முயற்சிக்க வேண்டும்.

2. மற்றுமொரு சாரார் **21/4** தாக்குதலை ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் தலைமீது சுமத்தி, உங்களோடு நாங்கள் இனி எங்கனம் வாழ முடியும் என்று கேட்கிறார்கள். ஆயிரம் வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்கள் இந்த நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கவில்லை... நாட்டுக்கெதிராக சதி செய்யவில்லை... குர்ஆனைச் சிலர் பிழையாக விளங்கிக் கூறுவது போல கண்ட இடத்தில் எவரையும் முஸ்லிம்கள் கொலை செய்யவில்லை... இனங்களோடு இணக்கமாகவே இருந்திருக்கிறார்கள். மத சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் செயல்பட்டார்கள் என்பவற்றை மறந்து முஸ்லிம்கள் ஆபத்தானவர்கள் என்று கூறத் தலைப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் உண்மைகளுக்கப்பால்... நியாயங்களுக்கப்பால்... வேறு ஏதோ ஒன்றை விரும்புகிறார்கள் என்பது மட்டும் புலனாகின்றது.

யதார்த்தத்தில் அவர்கள் முஸ்லிம்களான எங்களைப் பார்த்துப் பயப்பட வேண்டியதில்லை. காரணம், நாட்டின் சகல வளங்களும் பலங்களும் அதிகாரங்களும் அவர்களின் கைகளிலேயே இருக்கின்றன. இணக்கமாக வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களைப் போன்றதொரு சமூகத்தோடு அவர்கள் எந்தப் பிரச்சினையையும் பேசித் தீர்க்கலாம். எனினும், அதனை அவர்கள் விரும்பவில்லை போல் தெரிகிறது.

நாட்டு மக்களும் முன்பிருந்ததை விட தற்போது இத்தகையவர்களையே அதிகம் நம்புகின்ற நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள், படித்தவர்கள் உட்பட!

இந்நிலையில், அவர்களைத் திருப்திப்படுத்த எங்களால் முடியாது போனாலும் முஸ்லிம்களைப் பற்றியோ இஸ்லாத்தைப் பற்றியோ அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைப் புறந்தள்ளிவிட்டு தம் பாட்டில் இருந்துவிட நாம் எத்தனிக்கலாகாது.

அர்த்தமற்ற, போலியான குற்றச்சாட்டுக்களை ஆதாரங்களோடு நிரூபிக்குமாறு நாம் அவர்களிடம் கேட்டுத்தான் ஆகவேண்டும்.

அவர்கள் பிழையான புரிதல்களோடு முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக் களுக்கு அழகிய, அறிவுபூர்வமான வழிகளில் நாம் விளக்கம் தரவும் வேண்டும்.

எங்களிடம் இருக்கும், அவர்கள் விரும்பாத... அதேநேரம், மார்க்கத்தின் அடிப்படைகளோடு முரண்படாத அம்சங்களில் நாம் மாற்றங்களைக் கொண்டுவரவும் வேண்டும்.

எங்களுக்கும் அவர்களுக்குமான பொது விடயங்களில் மற்றும் பிரச்சினைகளில் நாங்கள் அவர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும். அத்துடன் எமக்கெதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களை இனவாதிகளாகச் சித்தரித்து அவர்களைவிட்டுத் தூரமாகிவிடாமல் உண்மைகளை அவர்களோடு கலந்துரையாடும் வாய்ப்புகளையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவையனைத்திற்கும் பிறகு எஞ்சியுள்ளவற்றை அல்லாஹ்விடம் ஒப்படைக்கலாம். அப்போது எங்களது கடமைகள் முடிந்து விடுகின்றன. எங்களது விடயத்தில் அல்லாஹ்வும் திருப்திப்படுவான்.

## 22

# வாழ்க்கையை அலங்கரித்தல்

இலாபமீட்டி வாழ நினைப்பவர்கள் வாழ்க்கையை அசிங்கப் படுத்திக் கொள்கிறார்கள். சேவை மனப்பான்மையோடு வாழ்பவர்கள் வாழ்க்கையை அலங்கரித்துக் கொள்கிறார்கள்.

இலாபமீட்டி வாழ நினைப்பவர்கள் சுயநலன், பேராசை, பிடி வாதம், கடுமை, முரண்பாடு, விதண்டாவாதம், குறுகிய மனப்பாங்கு, பிறரை மதிக்காமை, உண்மையை ஏற்க மறுத்தல், வாக்குறுதி மீறுதல், பொய், ஏமாற்று, இனவெறி, மதவெறி போன்றவற்றால் வாழ்க்கையை அசிங்கப்படுத்திக் கொள்கிறார்கள்.

சேவை மனப்பான்மை கொண்டவர்கள் பிறர் நலன், விட்டுக் கொடுப்பு, மென்மை, அன்பு, சகோதரத்துவம், மனித நேயம், உடன்பாடு, பரந்த மனம், பிறரது சுதந்திரத்துக்கு மதிப்பளித்தல், உண்மையை ஏற்றுக்கொள்ளல், குறைகளைத் திருத்திக் கொள்ளல், பணிவு போன்ற உத்தம குணங்களால் தங்களது வாழ்க்கையை அலங்கரித்துக் கொள் கிறார்கள்.

இறந்தாலும் வாழ்ந்தாலும் இரண்டாவது வகையினராக வாழவே நாம் அனைத்துப் பிரயத்தனங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை தோல்வி என்பது உலகில் தோன்றும் நெருக்கடிகளால் வருவதல்ல. மாறாக, எமது வாழ்க்கைக்கு அழகு சேர்க்கும் இரண்டாவது வகைப் பண்புகளை இழப்பதனால் வருவதே உண்மையான தோல்வியாகும்.

# 23

## பெண்கள் விவகாரம்

*பெண்கள் விடயத்தில் மூன்று வகையான அணுகுமுறைகளை தொன்றுதொட்டு இன்றுவரை ஆண்கள் பேணி வந்திருக்கிறார்கள். அந்த மூன்று அணுகுமுறைகளும் மூன்று வகையான சமூகத் தோற்றப்பாடுகளை உருவாக்கியிருக்கின்றன. மனித சமூகத்தில் சரிபாதியாக இருக்கும் பெண்களது விடயத்தில் எடுக்கப்படும் ஒரு தீர்மானம் சமூகத் தோற்றப்பட்டை மாற்றாதிருக்க முடியாதல்லவா?*

1. *பெண்களை இறுக்கமாக மூடிவைத்து சமூதாய நீரோட்டத்திலிருந்து அவர்களை மறைத்துவிடும் தோற்றப்பாடு.*

2. *பெண்களை முற்றாகத் திறந்துவிட்டு ஆண்களை எதிர்த்தரப்பினராக மாற்றி அனைத்து விவகாரங்களிலும் ஆண்களோடு பெண்கள் போட்டியிடும் தோற்றப்பாடு.*

3. *ஆண்களோடு பெண்கள் ஒன்றிணைந்து ஆண்-பெண் உறவுகளுக்கான வரையறைகளையும் பேணி, தமது இயல்புகளுக்கும் திறமைகளுக்குமேற்ப ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டு சமுதாய நீரோட்டத்தில் பெண்கள் பங்கெடுக்கும் தோற்றப்பாடு.*

இந்த மூன்று தோற்றப்பாடுகளும் வெவ்வேறு குணவியல்புகள் மற்றும் உளவியல் நடத்தைகளைக் கொண்டவையாக இருக்கின்றன. வாழ்க்கைச் சக்கரங்களைச் சுழலச் செய்வதில் அல்லது திசைமுகப்படுத்துவதில் அவை பெரும் தாக்கமுள்ளவையாகவும் இருக்கின்றன.

மாநபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மேற்கூறப்பட்டவற்றுள் மூன்றாவது தோற்றப்பாடு கொண்டதாகவே தனது சமூகத்தைக் கட்டியெழுப்பினார்கள் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். அந்தத் தோற்றப்பாட்டுக்குரிய குணவியல்புகள் மற்றும் வரையறைகளையும் அன்னார் தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள். மனித சமூகமும் பொதுவாக இந்தத் தோற்றப்பாட்டையே இயல்பில் விரும்பக்கூடியதாக இருக்கின்றது.

“பெண்கள் ஆண்களின் சரி பாதி” என்பது நபிமொழி.

“விசுவாசிகளான ஆண்களும் விசுவாசிகளான பெண்களும் நன்மைகளை வளர்த்து தீமைகளை குறைத்து ஒருவருக்கொருவர் பக்கபலமாக நின்று உதவுகின்றவர்களாகவே இருக்கின்றனர்.” (அல் குர்ஆன் 9:71)

போன்ற வேதவரிகளும் தூதர் மொழிகளும் இந்தத் தோற்றப்பட்டுக்கான சான்றுகளாகவே இருக்கின்றன. அதனையே இன்றைய சூழலில் பெண்கள் விடயத்தில் நாம் கடைப்பிடித்தாக வேண்டும்.

ஏனைய இரண்டு தோற்றப்பாடுகளும் மாநபியின் நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டவையாகும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# 24

## இஸ்லாத்தின் Display

இலங்கை வாழ் முஸ்லிம்கள்தான் இலங்கை மக்களுக்கு முன்னால் காட்சியளிக்கின்ற இஸ்லாத்தின் Display ஆகும். அந்த Display இல் எது வர வேண்டும்; எது வரக்கூடாது என்பதை யார் தீர்மானிப்பது என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். அந்த Display யில் இஸ்லாமாகத் தற்போது காட்சியளித்துக்கொண்டிருக்கும் படம் எத்தகையதாக இருக்கிறது என்றும் ஒரு கணம் நோட்டம் விட்டுப் பாருங்கள்.

அந்த Display யில் காட்சியளிக்க வேண்டியவை நிறையவே இருக்கின்றன. அவற்றுள் சிலதை இங்கு உதாரணங்களாகத் தருகிறோம்.

- அன்பும் சகோதரத்துவமும்
- ஜீவ காருண்யம்
- மனித நலனில் அதீத கரிசனை
- மக்களது பிரச்சினைகளைத் (முஸ்லிம்களது மட்டுமல்ல) தீர்ப்பதற்காக அனைவருடனும் கைகோர்த்தல் மற்றும் குரல் கொடுத்தல்.
- குறிப்பாக மதத்தின் பெயர் தாங்கிய தீவிரவாதத்திற்கெதிராக செயல்படுதல்

- இனவாதத்திற்கும் மத வெறிக்கும் இடமளிக்காதிருத்தல்
- விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வாழ்க்கை
- அறிவுபூர்வமான அணுகுமுறை (தூய்மையற்றதுமல்ல; இலாப நோக்கம் கொண்டதுமல்ல)
- சமூகங்களுக்கிடையிலான உறவும் அந்நியோன்யமும் பரஸ்பர ஒத்துழைப்பும்
- இலங்கைப் பிரஜை என்ற தேசத்துடனான பிணைப்பும் அது சார்ந்த கடமைகளும்
- இயற்கையின் மீதான பாசமும் அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வும்.
- பன்மைத்துவம் யதார்த்தமானது என்பதை ஏற்ற நிலையில் அனைவரதும் சுதந்திரம் மற்றும் உரிமைகளை மதித்து நடத்தல்
- சட்டம் ஒழுங்கு என்பவற்றைப் பேணல்
- பெண்களின் பங்கேற்பு

போன்ற இன்னோரன்ன உன்னதங்களுக்கு மாற்றமாக அல்லது இவை போன்ற உன்னதங்களுக்குப் பொருந்தாத விதமாக எமது Display இல் இன்று காட்சி தந்துகொண்டிருப்பவற்றை நாம் அகற்றியாக வேண்டும். அவ்வாறு அகற்ற வேண்டியவை பற்றிய பட்டியல் ஒன்றை ஒவ்வோர் ஊரிலும் தயார் செய்யலாம். கலந்தாலோசனையோடு அவற்றை அகற்றும் பணிகளிலும் நாம் ஈடுபடவேண்டும்.

25

## இறைத் தொடர்பு

இவையனைத்திற்கும் இறுதியாகவும் முதலாகவும் வானங்களினதும் பூமியினதும் ஜீவராசிகளினதும் மனிதர்களினதும் இரட்சகனாகிய அல்லாஹ்வைச் சார்ந்தவர்களாக நாம் மாறிவிட வேண்டும். எங்களது பலமும் பலவீனமும் அல்லாஹ்வுடனான இந்த உறவில் ஏற்படும் பலம் மற்றும் பலவீனங்களின் பிரதிபலிப்புகளாகவே இருக்கும்.

இந்த உறவு தனிப்பட்ட உறவே தவிர, கூட்டாக வெளிப்படுத்தும் உறவு அல்ல. அல்லாஹ் கூட்டாக நிறைவேற்றுமாறு ஏவிய ஐவேளைத் தொழுகை மற்றும் ஸகாத், ஹஜ் போன்ற கடமைகளின் போது இந்த உறவை நாம் கூட்டாக வெளிப்படுத்தியே ஆக வேண்டும். அதில் நாம் கண்டிப்பாகவும் இருக்க வேண்டும்.

அதேவேளை, இந்த சந்தர்ப்பங்களோடு அல்லாஹ்வுடனான உறவு முற்றுப் பெற்றுவிட்டதாக நாம் கருதக் கூடாது. சுன்னத்தான வணக்கங்கள், நோன்பு, தஹஜ்ஜுத், வித்ர், திக்ர், தவ்பா, இஸ்திஃபார், காலை மாலை ஓதல்கள், குர்ஆன் திலாவத், மார்க்கத்தை முடியுமானவரை கற்றல் மற்றும் கற்றதன்படி ஒழுகல், நல்லவர்களுடனான சகவாசம் என அல்லாஹ்வுடனான உறவைப் பலப்படுத்தும் வழிகள் பல உண்டு.

அந்த வழிகளினூடாக ஒவ்வொரு முஸ்லிமும் உள்ளார்ந்த வகையில் தனது இரட்சகனுடனான உறவைப் பலப்படுத்த வேண்டும்; கட்டி யெழுப்ப வேண்டும்.

அந்த உள்ளார்ந்த உறவில் இரண்டு அம்சங்கள் பாரிய தாக்கத்தையும் அல்லாஹ்வுடனான நெருக்கத்தையும் ஏற்படுத்தவல்லனவாக இருக்கின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றோம்.

i. அருள்கள் மூலமாக அல்லாஹ்வை உணர்தல்.

ii. எமது தவறுகளை அதிகம் அதிகமாக எமக்குணர்த்துகின்ற இஸ்திஃபார் மூலமாக அல்லாஹ்வை நெருங்குதல்.

இத்தகைய உறவு நாள் தவறாமல், பொழுது தவறாமல் பேணப்படும் போது ஏனைய வணக்க வழிபாடுகளும் நற்செயல்களும் அதனூடாக வாலுப்பெறுகின்ற நிலை உருவாகும்.

இவற்றோடு, மார்க்கத்தின் போதனைகளுக்கேற்பவும் சூழலின் பொருத்தப்பாடுகளுக்கமையவும் நாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வுடனான உறவை வலுப்படுத்தக் கூடியதே!

அந்த உறவு மேலே கூறப்பட்ட மற்றும் கூறப்படாத வழிமுறை களைக் கொண்டு வலுவூட்டப்படுகின்றபோதே எமது பிரார்த்தனைகள் ஏற்புடையவையாகவும் தாக்கமுடையவையாகவும் இருக்கும்.

ஒவ்வொரு முஸ்லிமும் தனது இரட்சகனுடனான உறவைப் பலப் படுத்தி தனது பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும் நிலைக்கு உயர முடியுமாக இருப்பின், எமது உலக-மறுமை வாழ்வுக்கு அதனைவிடச் சிறந்த கொடையொன்று வேறு இருக்க முடியாது.

எங்களையும் எங்களது செயல்களையும் பொருந்திக் கொண்டு, எங்களது உலக-மறுமை வாழ்க்கையை அல்லாஹ் மேம்படுத்தி வைப்பானாக!